மூடப்பட்டுள்ள

தோல் தொழிற்சாலைகளை திறக்க நடவடிக்கை

சட்டசபையில் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, மே.28-

"தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள தோல் தொழிற்சாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று முதல்-அமைச்சர் கருணாநிதி தெரிவித்தார்.

வட ஆற்காடு அம்பேத்கார்

தமிழக சட்டசபையில் நேற்று உறுப்பினர்கள் அப்துல் லத்தீப் (தேசிய லீக்), ஞான சேகரன் (தமிழ்மாநில காங்கிரஸ்) ஆகியோர் சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தனர்.

அவர்கள் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள தோல் தொழிற் சாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பேசினார்கள்.

இதற்கு பதில் அளித்து முதல்-அமைச்சர் கருணாநிதி பேசுகையில் கூறியதாவது:-

தோல் தொழிற்சாலைகள்

தமிழ்நாட்டில் 894 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ளன.

அவற்றில் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 569 தோல் பதனிடும் தொழிற் சாலைகளும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 70, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 165, திருச்சி மாவட்டத்தில் 23, பெரியார் மாவட்டத்தில் 64, புதுக்கோட்டை மாவட்டத்தில் 2, தென் ஆற்காடு மாவட்டத்தில் 1 தொழிற்சாலையும் உள்ளன.

கோர்ட்டு ஆணை

இவற்றில் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 208, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 70, செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 45, திருச்சி மாவட்டத்தில் 23, பெரியார் மாவட்டத்தில் 60, புதுக்கோட்டை மாவட்டத்தில் 1 என மொத்தம் 407 தோல் பதனிடும் நிறுவனங்கள் உச்சநீதிமன்ற ஆணையின்படி மூடப்பட்டு உள்ளன.

இந்த கதவடைப்பு காரணமாக மொத்தம் 46,600 தொழிலாளர்கள் பணி இழப்பில் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

விவசாய நிலம் பாதிக்கப்படுகிறது. குடிநீர் பஞ்சம் ஏற்படுகிறது என்று விவசாயிகள் கோர்ட்டுக்கு சென்றதால் சுப்ரீம் கோர்ட்டு இதுபோன்ற ஆணையை பிறப்பித்தது.

திறக்க நடவடிக்கை

எனவே இது தொடர்பாக ஒரு முத்தரப்பு கமிட்டியை அமைத்து தோல் தொழிற்சாலை ஊழியர்களும், விவசாயிகளும், பொது மக்களும் பாதிக்கப்படாத அளவுக்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அப்துல் லத்தீப் (தேசிய லீக்):- இந்த பிரச்சினை உருவானதற்கு சுப்ரீம் கோர்ட்டு தான் முக்கிய காரணமாகும். உத்தரப்பிரதேசம், ஆந்திரா, மேற்கு வங்காள அரசின் வக்கீல்கள் சரியான முறையில் சுப்ரீம் கோர்ட்டில் எடுத்து வைத்துள்ளனர்.

சட்டத்தில்

ஆனால் நமது அரசு வக்கீல் சரியான விளக்கம் தராததால் இந்த தீர்ப்பு வந்து இருக்கிறது. எனவே தனியாக சிறப்பு வக்கீலை நியமனம் செய்து சுப்ரீம் கோர்ட்டில் எடுத்து கூறி, ஏற்பட்டுள்ள சிக்கலை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சபாநாயகர் பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன்:- கவன ஈர்ப்பு தீர்மானத்தில் ஏற்கனவே பேசி, அதற்கு முதல்-அமைச்சர் விளக்கம் அளித்த பிறகு பேச அனுமதி அளிக்க கூடாது என்று சட்டத்தில் உள்ளது. எனவே நீங்கள் இதுபோல் பேசக் கூடாது.

அனுமதிக்கமாட்டேன்

அப்துல் லத்தீப்:- முதல் அமைச்சர் பதில் அளிக்க தயாராக உள்ளார்.

சபாநாயகர் பழனிவேல் ராஜன்:- நீங்கள் மூத்த உறுப்பினர். நான் நிற்கும்போது நீங்கள் இருக்கையை விட்டு எழுந்து நிற்க கூடாது. உட்காருங்கள். இனிமேல் இதுபோல பேச அனுமதிக்க மாட்டேன்.

வழக்குகள் வாபஸ்

முதல்-அமைச்சர் கருணாநிதி:- இந்த பிரச்சினைக்கு முடிவு காணத்தான் முத்தரப்பு பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அந்த கமிட்டியினர் அந்த வட்டாரத்தில் உள்ள உறுப்பினர்களை அழைத்து பேசுவார்கள். அப்போது அப்துல் லத்தீப் தனது கருத்துக்களை எடுத்து கூறலாம்.

இந்த சிக்கலை எப்படி தீர்ப்பது என்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். சுப்ரீம் கோர்ட்டில் விவசாயிகள் சார்பில் தொடரப்பட்ட வழக்குகளை அவர்களே முன்வந்து திரும்ப பெறவும் வாய்ப்பு உண்டு.

இவ்வாறு முதல்-அமைச்சர் கருணாநிதி கூறினார்.